Written by Administrator
Tuesday, 09 June 2009 08:07 - Last Updated Tuesday, 09 June 2009 14:53

□□□□□□□□ □□□□ : 40 □□□□ : 9 □□ 2009



உலகப் பொருளாதாரமும் நம்நாட்டின் நிலைமையும்

- மு. கமுகன்

உலகப்பொருளாதாரம் தற் போது ஓளவை அளிக்கக் கூடிய நிலையில் இருக்கும் போதும், இந்தியாவின் பொருளா தார நிலைமை மிக்கும் உறுதியாக உள்ளது என்று பல வல்லுனர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர். உலக நாடுகள் பலவற்றிலும் குறிப்பாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பொருளா தாரப் பின்னடைவு ஏற்பட்டுள் ளது. விலைவாசி ஏற்றத்தாலும், பண வீக்கம் அதிகரித்ததாலும் ஏற்பட்ட நிலைமை செல்ற பெ மாதங்களுக்கு முன்பு இந்நாடு களில் இருந்தது. ஆனால், அவை இன்று பொருளாதாரப் பின்ன டைவை அடைந்துள்ளன. இந்தி யாவிலும் பணவீக்கம் அதிகரித்து இரட்டை இலக்கை லை மாதங் களுக்குமுன் அடைந்தது. ஆனால் கென்ற ஏப்ரல் மாதம் 11ம் தேதி முடிவ டைந்த வாரத்தில் முதன்மைப் பண்டங்களின் விலை விழும் 0.5 சதவீதம் உயர்ந்தது. எரிபொருள் களின் விலை விழும் மாறாமலும், உற்பத்தி செய்யப்படும் பொருள் களின் விலை விழும் 0.2 சதவீத மும் உயர்ந்தது. மொத்த விலைக் குறியீட்டு எண் 0.3% உயர்ந்தது. இக்காரணங்களால் பணவீக்க விழும் சிறிதளவு உயர்ந்து பொரு ளாதார நிலைமை சீராக உள்ளது. ஐ மாதங்களுக்கு முன் விலை வாசி ஏற்றத்தினாலும், நம் நாட்டு நாணயத்தின் மதிப்பு மிக உயர்ந் தாலும், இந்திய வணிகம் ஓளவு பாதிக்கப்பட்டு இருந்தது. இதிய ரூபாய்க்கு எதிரான டாலரின் மதிப்பு வீழ்ச்சி அடைந்ததால், ஏற்றுமதி பாதிக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுது டாலரின் மதிப்பு ஏறக்குறைய ஐம்பது ரூபாய் என்று இருப்பதால் ஏற்று மதியாளர்கள் பயனடைவர். ஆனால், உலக நாடுகளில் பொரு ளாதாரப் பின்னடைவு ஏற்பட்டு இருப்பதால், ஏற்றுமதி குறைவு வாய்ப்புண்டு.

உலகப் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்துவரும் இக்கால கட்டத்தில், இந்தியாவில் அதன் பாதிப்பு அதிகம் தெரியவில்லை. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பொருளாதாரப் பின் னடைவு ஏற்பட்ட அது இன்னும் தொடர்ந்து கொண்டு வருகிறது. அந்நாட்டு அரசுகள் பின்னடை வை சரிசெய்ய தேவையான நட வடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இந்தியா உலகப் பொருளாதாரத்தை தம்பிடித்துக் தாலும் உலக நாடுகள் பலவற்றில் இந்தியாவின் பொருள்கள் ஏற்று மதி ஆகாதாலும், இந்தியப் பொரு ளாதாரமும் ஓரளவு பாதிக்கப் பட்டு உள்ளது என்பதை ஆயினும் இந்தியாவின் உள்நாட்டு சேமிப்பும், அந்நியச் செலாவணி கையிருப்பும் போது மான அளவில் இருப்பதால் இந்தி யாவில் பொருளாதார மந்த நிலைமைன் காரணப்படுகிறதே யன்றி, பின்னடைவு ஏற்பட வில்லை. இதைத்தவிர அரசும் மத் திய ரிசர்வ் வங்கியும் தேவையான நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்து வருதாலும், பொருளா தார மந்தநிலையை ஓளவு சமா ளிக்கப்பட்டு வந்துது. தற்போது தொழிற்சாலைகள் பலவற்றின் உற்பத்தில் குறைவினாலும் மக்க ளின் வாங்கும் சக்தி குறைவினா லும், இலாபத்தைக் கணக்கில் கொண்டு, பலர் வேலை நீக்கம் செய்யப்படுவோர்கள் என்று கூறப் படுகிறது. இதுபோன்ற நடவடிக் கைகள் தவறு தொழிலுட்பத் தில் ஈடுபடும் மென்பொருள் கற் பத்தி நிறுவனங்களில் அதிகம் காணப்படுவதாகவும் கூறப்படுகி றது. உலகநாடுகளில் பலவற்றில் காணப்படும் பொருளாதாரப் பின் னடைவினால், அரசை தங்கள் மென்பொருள் மேம்பாட்டுத் திட் டங்களைச் வலவிட்டதாலோ அல்லது அவை தற்காலிகமாக நிறுத்தி வைத்ததாலோதான் இந்த நிலைமை என்று பொருளாதார வல்லுனர்கள் கூறுகின்றனர். ஆயி னும், இந்திய மேம்பொருத நாடு என்பதாலும், மக்கள் தொகை அதிகமாக இருப்பினும், வேறு தொழில்களில் வேலை இழந்தோர் ஈடுபட முடியும் என்பதாலும் பல வேறு பணிகளுக்கு அவர்கள் சென்று விடுகின்றனர். இவை வெவ்வே பல பொருளாதார வல்லு னர்கள் தொழில்சார்ந்த கல்வி முறைகளை நாடு முழுவதும் அறி முகப்படுத்துவது அவசியம் என்று கூறி வருகின்றனர். சில மாதங்க ளுக்கு முன்னர், இந்தியா கட்டப் பட நாடுகள் பணவீக்கத்தின் தாக் கத்தினால் உழன்று கொண்டிருந் தன. விலைவாசி உயர்வு, ஏற்று மதியில் தேக்கம், போன்ற நிலை மை இருந்து வந்தது. ஆனால் இன்று அந்த நிலைமை மாறி பல நாடுகளில் பணச்சுருக்கம் ஏற் படும் நிலை உள்ளது பணவீக்கத் தினால் நம்மிடம் உள்ள பணத் தின் மதிப்பு குறைந்து கொண்டே வரும். ஆனால் பணச்சுருக்கத் தினால் நம்மிடம் உள்ள பணத் தின் மதிப்பு அதிகரித்தும் உதார ணமாக ஒரு பொருளின் விலை 10 ரூபாய் என்றால், பணவீக்கம் இருக்கும்போது அதன் மதிப்பு ஒவ்வொரு நாளும் உயர்ந்து கொண்டே போகும். மக்களுக்கு அதை வாங்கும் திறன் ஒரு கட்டத்தில் வாங்க இயலாமல் இருக்கும். ஆனால், பணச்சுருக்கத் தில் அப்பொருளின் விலை குறைந்து கொண்டே போகும். அப்பொருது, அப்பொருளின் விலை மேலும் குறையும் என்று மக்கள் அவற்றை உடனடியாக வாங்க மாட்டார்கள். பொருளா தாரத்தின் இவ்விரண்டு நிலைகளி லும் பணப்புழக்கம் குறையும். ஆகவே அதற்குத் தேவையான நடவடிக்கைகளை இந்தியா உட் பட உலகநாடுகள் அனைத்தும் எடுத்து வருகின்றன. ஆயினும் சமீபத்தில் பாரத ரிசர்வ் வங்கி யின் அறிக்கையின்படி, இந்தியா வில் பணவீக்க விகிதம் புதியத் திற்கு மேறும் பணச் சுருக்க நிலை ஏற்படாது என்று கறியுள்ளது மறநிறைவைத் தரும் வகையில் அமைந்துள்ளது பாரத ரிசர்வ் வங்கியும் பணவீக்கத்தின் போதும் தற்போதைய பொருளா தார மந்த நிலையின்போதும் அல்லாபோது பொருளாதார நிலைகளை ஊக்குவிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பாரத ரிசர்வ் வங்கி சமீபத்தில் எடுத்த நடவடிக்கைகளில் மிக முக்கியமானவை ரெபோ (Repo) மற்றும் ரிவர்ஸ் ரெபோ (Reverse Repo) வட்டி விகிதங்களை குறைத் தது ஆகியவைகளாகும். ரெபோ (Repo) எனப்படுவது பாரத ரிசர்வ் வங்கி மற்ற வங்கிகளுக்கு அளிக் கும் கடன் தொகைக்கான வட்டி விகிதமாகும். ரிவர்ஸ் ரெபோ (Reverse Repo) எனப்படுவது வங் கிகள் தங்களிடம் உள்ள மிகுதி யான தொகையை பாரத ரிசர்வ் வங்கிக்குக் கொடுக்கும்போது பெறப்படும் வட்டி விகிதமாகும். பாரத ரிசர்வ் வங்கி ரெபோ விகி தத்தை 0.25 புள்ளிகள் குறைத்து 3.25 சதவீதமாகவும் ரிவர்ஸ் ரெபோ விகிதத்தையும் 0.25 சத வீதம் குறைத்து 4.75 சதவீத மாகவும் அறிவித்துள்ளது. இத னால், மற்ற வங்கிகள் தொழிற் சாலைகளுக்கும், நிறுவனங்களுக் கும், தனியார்களுக்கும் அதிக மான அளவிலும், அதிக எண்ணிக் கையிலும் கடன்களைத் தர முடியும். அதேபோல், வைப்புத் தொகைகளின் வட்டி விகிதம் கணும் குறைய வாய்ப்புகள் உள் ளன. ரிவர்ஸ் ரெபோ விகிதத்தை பாரத ரிசர்வ் வங்கி குறைத்ததால், மற்ற வங்கிகள் தங்களிடம் உள்ள உபரியான பணத்தை ரிசர்வ் வங்கியிடம் குறைவான அளவே அளிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது இதனால் நிறுவனங்கள், மற்றும் தொழிற்சாலைகள் ஆகிய வற்றிற்கு மேறும் அதிக அளவு கடன் கிடைக்க வாய்ப்புண்டு. தொழிற்சாலைகளில் உற்பத்திப் பெருக்கம் ஏற்பட இது வழிவகுக் கும். வீடு கட்டுவதற்கான கடன் மற்றும் கார், மோட்டார் சைக் கின் ஆகியவற்றிற்கான கடன் மீதான வட்டி விகிதம் இதனால் குறையும். பாரத ரிசர்வ் வங்கியின் இந்த அறிவிப்பை அடுத்து பல



Written by Administrator
Tuesday, 09 June 2009 08:07 - Last Updated Tuesday, 09 June 2009 14:53



வங்கிகள் தாங்கள் வழங்கும் கடனுக்கான வட்டி விகிதத்தை ஓரளவு குறைப்பதாக அறிவித்துள்ளன.

ஆனாலும், சீரான வங்கி இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 6.5 சதவிகிதமாக இவ்வாண்டு இருக்கும் என்று அறிவித்து உள்ளது. இது சென்ற ஆண்டு 7.1 சதவிகிதமாக இருந்தது. ஆயினும் பொய்ப்புறங்களில் தேவை அதிகரிப்பு, கச்சா எண்ணெயின் விலைகுறைப்பு ஆகிய காரணங்களாலும், பொருள்களின் விலை குறைவு ஆகியவற்றால் பொருளாதாரம் நன்கு சீராகும் என்றும் பணவீக்க விகிதம் பூஜ்யத்திற்குக் கீழே சென்றாலும், அதனால் பணச்சுருக்கம் (deflation) ஏற்படாது என்றும் சீரான வங்கியின் கவர்னர் கூறியுள்ளார். ஏனெனில் நம்நாட்டில் பொருள்களின் தேவைகள் குறைய வாய்ப்பில்லை என்ற கருத்து உள்ளது.

உலகப் பொருளாதாரம் சீராகச் செல்லட்ட வேண்டுமெனில் அதற்கு தேவையான நடவடிக்கைகளை அமெரிக்கா உட்பட அனைத்து நாடுகளும் எடுக்க வேண்டும். கச்சா எண்ணையின் விலை சென்ற ஜில மாதங்களுக்கு முன்னர் பீப்பாய் ஒன்றிற்கு 150 டாலர் என்று விற்கப்பட்டு வந்தது. அது தற்போது சுமார் 48 டாலர் என்ற அளவில் தற்போது நிலை பெற்று உள்ளது இவ்வாறு விலை வீழ்ச்சியடைய காரணம் பல நாடுகளில் கச்சா எண்ணை வின் தேவைகள் குறைந்து என்று கூறலாம். கச்சா எண்ணை கற்பத்தி செய்யும் நாடுகள் அனைத்தும் எண்ணையின் விலை உயர்வு குறித்து அவ்வளவு மேற்கொண்டன. பீப்பாய் ஒன்றிற்கு 150 டாலர் அளவிற்கு விலை உயர்ந்து கொண்டிருந்தபோது பல நாடுகளில் அதன் தேவை குறைய ஆரம்பித்தது. இந்தியாவிலும் அதன் தேவை குறைந்தது. ஆகவே என்னை ஏற்றுமதி செய்யும் நாடுகள் ஒருங்கிணைந்து அவர் நின் உற்பத்தியைக் குறைத்தன. அதைத்தவிர நிறுவனப் பங்குகள், தங்கம், வெள்ளி போன்ற உலோகங்கள், கச்சா எண்ணை ஆகிய வற்றில் முதலீட்டாளர்கள் பணத்தை முதலீடு செய்வதை நிறுவனப் பங்குகள், உலோகங்கள் ஆகிய வற்றில் முதலீடு செய்தபோது கச்சா எண்ணையின் விலைகளும் குறைந்தன. ஆயினும், கச்சா எண்ணையின் விலைகளில் ஏற்ற இறக்கங்கள் காணப்படுகின்றன. இந்தியாவிற்கு கச்சா எண்ணையின் விலையில் உள்ள ஏற்ற இறக்கங்கள் பெரிய ஷயாமாகவே உள்ளது. ஏனெனில், இந்தியாவின் எண்ணை நிறுவனங்களின் இளப நஷ்டங்கள் கச்சா எண்ணையின் விலையைப் பொருத்தே உள்ளது. உலோகங்களில் பதிப்பு வாய்ந்த தங்கத்தின் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளது உலகின் பல முதலீட்டாளர்கள் தங்கத்தில் முதலீடு செய்ய தால்தான் இதுபோன்ற விலை உயர்வு என்று வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். மற்ற உலோகங்களின் விலைகளில் ஏற்ற இறக்கங்கள் காணப்படுகின்றன.

1990ஆம் ஆண்டுகளில் அதிக அளவில் திறி நிலைமையில் மந்த நிலை ஏற்பட்டபோது, இந்தியா எல்லாவகையிலும் பாதிப்பு அடைய வில்லை.அனால் தற்போது நாம் எதிர்நோக்கும் பொருளாதார மந்தநிலை அதுபோன்று கிடையாது. ஏனெனில், உலகப் பொருளாதாரத்தில் இந்தியாவும் ஒன்றி னைந்து உள்ளது. திறி நிலை மையில் ஏற்பட்டுள்ள பின்னடைவு பல நாடுகளைப் பாதித்துள்ளது என்றாலும், இந்த நிலை மையைச் சமாளிக்க அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து செயல் படுவது தேர்மறையான விளைவை ஏற்படுத்தி உள்ளது. கட்டமைப்பு வதிகள், விவசாயம், உரங்கள் போன்ற பிரிவுகளில் அதிக அளவு முதலீடு செய்ய வேண்டும் என்றும் அப்போதுதான் பொருளாதார நிலையைமில் முன்னேற்றம் ஏற்படும் என்றும் பொருளாதார வல்லுனர்கள் கருதின்றனர். இந்தியா உட்பட உலக நாடுகள் அனைத்தும் ஒருங்கினைந்து செயல்படுவதால், உலகப் பொருளாதாரப் பின்னடைவு வெகு விரைவில் நீங்கி, பழு நிராகும் என எதிர்பார்க்கலாம்.

□□

நிட்டம் மே 2009

31